# தமிழகத்தில் நாம்

பேராசிரியர். சி. இலக்குவனார்
எம். ஏ., எம். ஓ. எல்.

★

## சங்க காலத்தில் நாம்

சங்ககாலம் என்பது, தமிழகத்தின் பொற்காலமாகும் அப்பொற்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். தொடக்க காலம் இதுவென வரையறுத்துக் கூறுதல் இயலாது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் சங்ககாலம் என அழைக்கப்படும். சங்கம்கூடித் தமிழாராய்ந்து தமிழைப் போற்றி வளர்த்தனர் புலவரும் மன்னரும் மக்களும். மொழியைப் போற்றி முன்னிலையடைந்தனர் யாவரும்.

பாரதகண்டம் முழுவதும் பரவி வழங்கிய தமிழ், ஆரியத்தின் வரவால் சிதைவுற்று, வடவேங்கடம் தென் குமரி எல்லைக்குள் சுருங்கியது. இந்நிலை தொல்காப்பியர் காலத்திலேயே ஏற்பட்டு விட்டது. தொல்காப்பியர் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு ஆகும்.

இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியமே. தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் எனக்கருதப் பட்டாலும், மொழியாராய்ச்சி இலக்கிய ஆராய்ச்சிகட்குக் கருவி நூலாகவும், தமிழக வரலாற்றை அறிவிக்கும் வரலாற்று நூலாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியத்தின் துணைகொண்டும், திருக்குறளின் துணை கொண்டும், ஏனைய சங்க இலக்கியங்களின் துணைகொண்டும் பழந்தமிழர் வரலாற்றை அறியலாம்.



பழந்தமிழ் நாட்டில் இன்று நிலவும் சாதிகள் இல்லை. 'சாதி' என்றே சொல்லே தமிழன்று. அக்காலத்தில் மக்களை இடங்காரணமாகவும் தொழில் காரணமாகவும் பண்பு காரணமாகவும் வகைப்படுத்தினர். குறவர், பரவர், என்பன இடம்காரணமாக ஏற்பட்டன. உழவர், வேட்டுவர், அரசர் தொழில் காரணமாக ஏற்பட்டன. மறவர், சான்றோர், கொடியர் பண்புகாரணமாக ஏற்பட்டன. தொல்காப்பியர் பெயர்களை வகைப்படுத்திக் கூறுங்கால்

நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயரே.
வினைப்பெயர், உடைப்பெயர், பண்பு கொள் பெயரே,
பல்லோர் குறித்த முறைநிலைப் பெயரே,
பல்லோர் குறித்த சினைநிலைப் பெயரே,
பல்லோர் குறித்த திணைநிலைப் பெயரே,
கூடிவரு வழக்கின் ஆடியல் பெயரே,
இன்றிவர் என்னும் எண்ணியல் பெயரொடு.
அன்றியனைத்தும் அவற்றியல் பினவே.

என்று கூறியுள்ளார். இவற்றுள் சாதிப்பெயர் கூறப்படவில்லை. ஆகவே அவர்காலத்தில் சாதிகள் இல்லை யெனபது தேற்றம்.

சங்க காலத்தில் சாதிகள் அற்றிருந்த நம் தமிழினம் இன்று சாதிகளால் நிறைந்து பிரிந்து ஒற்றுமையற்று உழல்கின்றது. நிலம், தொழில், பண்பு, உடமை காரணமாக உண்டான பெயர்கள் இன்று சாதிப்பெயர்களாகி விட்டன. குறவர், உழவர், மறவர், உடையார் என்பன



தா.ம. 6

இன்று சாதிப் பெயர்களே இன்றுள்ள ஆயிரக் கணக்கான சாதிகளுள் கள்ளரும் மறவரும் அகமுடையரும் முக்குலத்தோராய் விளங்குகின்றனர். பண்டைத் தமிழகத்தில் காதலும் வீரமுமே ஏற்றம் பெற்றிருந்தன. காதல் வாழ்வை 'அகம்' என்றும், போர் வாழ்வைப் 'புறம்' என்றும் அழைத்தனர். அகமும் புறமும் அகங்கையும் புறங்கையும் போன்றன. ஒரு பொற்காசின் இருபுறங்களை யொத்தன. ஒன்றின்றி ஒன்றில்லை. இல்லற வாழ்வில் சிறந்த காலத்து அகமுடையராகவும், போர்க்கள வாழ்வில் புகழ்பெற்ற காலத்து மறவராகவும் களமராகவும் பெயர் கொண்டு விளங்கினர். இல்லற வாழ்வின் சிறப்பே நாகரிகத்தின் உச்சநிலை. வீரவாழ்வின் சிறப்பே நாட்டுப் பற்றின் உயர்நிலை. வீட்டுப்பற்றும் நாட்டுப்பற்றும் கொண்டு மேதகு அறச்செயல் புரிந்து வாழ்ந்தவர்களே அகமுடையாரும் புறமுடையாரும். அவர்களிலிருந்து பிரிந்து சென்றோரே ஏனை மரபினர்.

அகமுடையார்க்கும் புறமுடையார்க்கும் (களமர்க்கும் மறவர்க்கும்) உரிய பட்டங்களுள் ஒன்று தேவர். தேவர் என்றால் இனியர், என்று பொருள். நல்ல தமிழ்ச் சொல், இனியர், உயர்ந்தோர், கடவுள் தன்மையர் என்ற பொருள்களைக்கொண்ட இச்சொல் சாதிப் பட்டப்பெயரால் இன்று வழங்குகின்றது. அன்று புலவர்களில் சிறந்தோர்க்கும், அரசர்களில் சிறந்தோர்க்கும், இறைவர்க்கும் உரியதாய் விளங்கியது. திருவள்ளுவர் தேவர், இராச இராசதேவர், சோமசுந்தர தேவர் (மதுரைக் கடவுள்) என்னும் பெயர்களை நோக்குங்கள்.

சங்க காலத்தில் நாகரிக மக்களாய், முடியுடை மன்னராய், மாண்புறு புலவராய், உரிமை நாட்டில், ஈதல்புரிந்து இசைபடவாழ்ந்தோர். ஒட்டார் பின் செல்லாது, ஊணோம்பும் வாழ்க்கையைப் பெரிதென மதியாது, குன்றுவ குன்றியனைத்தும் செய்யாது ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பி உயர்ந்திருந்தோர். இதுவே சங்க காலத்தில் நம் வாழ்வு.

## மொழிப்பணியில் நாம்

மொழியே மக்களை மாக்கள் நிலையிலிருந்து உயர்த்தி கடவுள் நிலைக்குக் கொண்டு செல்லும் கருவியாகும். மொழி மக்களின் விழிக்கு ஒப்பாவது.

"எண் என்ப ஏனை எழுத்தென்ப; இவ்
விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு"

என்னும் தேவர் குறட்பாவில் இக்கருத்து இலைமறை காய்போல் விளங்குகின்றது.

உலகில் வாழும் மக்களுள் தமிழர்களாகிய நாமே இவ்வுயர் கருவியைப் படைத்துத் தமிழ் எனும் பெயரிட்டுத் தந்தோராய் வாழும் வழியை, வையகத்திற்குக் காட்டினோம் என்றால் மிகையன்று. தமிழே உலக முதன்மொழி எனும் உரை, புனைந்துரையன்று. 'தமிழ்' என்று தோன்றியது என்பதை எவரும் அளவிட்டுரைக்க முடியாது. அது செப்ப முற்றுச் செந்தமிழ் எனும் பெயர் எய்தியதும் பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்பேயாம். அதனை உயிரினும் இனியதாக ஓம்பினர் நம் தமிழ் முன்னோர். அதனை நன்றாகக் கற்றனர்; அதில் இனிமை கெழுமிய இலக்கியங்களைப் படைத்து உலகுக்கு அளித்தனர். இலக்கணங்களை யாத்து மொழி வளர்வதற்குரிய வரம்பு கோலினர். இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் பெற்ற இனிய எழிலுறு மொழியாக ஏற்றம் பெறச் செய்தவர்களுள் பலர் தேவர் எனும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளனர்.

ஒல்கப் பெரும் புகழ் தொல்காப்பியம் இயற்றியவர் தொல்காப்பிய தேவர் என அழைக்கப்பட்டார். தமிழர்க்குப் பெரும் புகழ் ஈட்டித் தரும் வகையில் உலகப் பொது மறையாம் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவ தேவர் எனப்பட்டார். இவ்வாறே, கபிலரும் பரணரும் நக்கீரரும் தேவர் என்ற சிறப்புச் சொல்லைப் பெற்றே இருக்கின்றனர். ஆகவே சங்க காலத்தில் தமிழ் வளர்த்தோர் தமிழ்ப் புலமை பெற்றோர் தேவராகவே இருந்துள்ளனர்.

இடைக் காலத்தில் இராசராசதேவரும் இராசேந்திர தேவரும் செந்தமிழ் வளர்த்தமையைக் கல்வெட்டுகளின் சான்றுகொண்டு அறியலாம். பல்லவர் காலத்தில் பிராகிருத மொழிக்கும் வடமொழிக்கும் இடமளித்தனர். தமிழ் துச்சிலிருந்தே வாழ்ந்தது. சோழப்பேரரசர்கள் தாம் கல் வெட்டிலும் நற்றமிழ் நாட்டினர் கோவில்களிலும் குடிமக்களிடையிலும் செந்தமிழ் வழங்கச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தனர்.

பிற்காலத்தில் நான்காம் தமிழ்ச் சங்கம் என அழைக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தை அமைத்தவர்களும் தேவர் மரபினராம் சேதுபதி அரசர்களும் பாண்டித்துரைத் தேவரும் ஆவார்கள். சங்ககாலம் போல் புலவர்கள் கூடவும் புதியன புனையவும் ஆவன செய்தார்கள். சேது காவலர்களின் அரண்மனைகளிற் செந்தமிழ் முழங்கியது.

ஆங்கிலமே ஆளும் மொழியாகித் தமிழர்கள் அடிமையாகி மொழிப்பற்று அற்று விழியிழந்த குருடர்போல் மெலிவுற்று தமிழ் மொழியை மறந்துவிட்டனர். தமிழும் ஒரு மொழியா என வினவலுற்றனர். வடமொழியின் உடலில் தோன்றிய வடுப்போன்றது தமிழ் என்றனர். "ஆங்கிலம் ஒன்றையே கற்று அதற்காக ஆக்கையும் ஆவியும் விட்டுத் தாங்களும் அந்நியராகித் தமிழின் தொடர்பற்றுப்" போயிருந்தனர் தமிழர்கள். ஊமையராய்ச் செவிடர்களாய் வாழ்ந்தனர்.

தஞ்சைக் கருகில் உள்ள கரந்தையம் பதியில் தமிழ்ச்சங்கம் ஒன்று தோன்றியது "தமிழ் தமிழ்" என முழங்கியது. தமிழின் இன்றைய மறுமலர்ச்சிக்குக் கால்கோல் இட்டது. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தது. ஐந்தாம் சங்கமென அழைக்கப் பெரும் புகழ் அடைந்தது. தமிழர் இழந்துள்ள தமிழ்ச் செல்வத்தை மீட்டிக் கொள்ளும் உறுதியைக் கொண்டது அதனாலேயே அச்சங்கம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் என அழைக்கப்பட்டது. கரந்தை என்றால் நிரை மீட்டலாம் சங்க காலத்தில்.

இச் சங்கத்தைத் தோற்றுவித்துத் தம் உடலெனப் போற்றியவர்கள் தேவர் மரபினராம் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனாரும் அவர் தம் அருமைத் தம்பி இராதாகிருட்டிணனாருமாவார்கள். அவர்களுக்குத் துணையாக இருந்தவர்களுள் நாவலர் ந. மு. வே. நாட்டாரும் இராசாளியாரும் பொன்னணணைக் களத்தில் வென்றாரும் நம் மரபினரே. இற்றைய நாளிலும் நம் மரபினர் ஆங்காங்குப் புலவராகவும் புரவலராகவும் தமிழைப் போற்றி வருகின்றனர். செந்தமிழ் வளர்த்து வரும் தேவர் மரபு மீண்டும் தம் உயர் நிலையை அடைய இறைவன் அருள் புரிவாராக. இறைவனும் தேவனேயன்றோ?

★

★ இன்றைய நாட்டிலுண்டான நமது மக்களின் நிலையை எண்ணிப் பாருங்கள். காலச் சக்கரச்சுழலிலே சிக்குண்டு வாழ்விழந்து, வலிவிழந்து, உரிமை இழந்து, மாற்றார்களின் அடிமையாய் அறிவு வளராத நிலையில் தளர்ந்து தடுமாறி செயலாற்ற திறனிருந்தும் மனமில்லாதவர்களாய் நெஞ்சுரமிழந்து, வேற்றுமையால் வீண் பழிக்காளாகி வாழ்கிறோம், இல்லை வாடுகிறோம்!